செய்தி வெளியீடு எண்:379 நாள் – 10.7.2009

# நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை! 18 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு 70 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார் !

செந்தமிழைப் போற்றி வளர்க்கும் சீரிய பணியாகச் சிந்தனை வளம் நிறைந்த தமிழ்ச் சான்றோர்களின் எண்ணங்களும், கருத்துகளும் இன்றைய காலத்திற்கு மட்டுமல்லாமல், இனிவரும் காலங்களிலும் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்னும் விழைவோடு, தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சிறந்த முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2006க்குப்பின், பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் முதலான 62 தமிழறிஞர்களின் நூல்கள் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகையாக 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மேலும் 28 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க இசைவளித்துள்ள 21 தமிழறிஞர்களின் படைப்புகளையும், உடல் நலிவடைந்து சிகிச்சை பெற்று வரும் திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்புகளையும் நாட்டுடைமையாக்கி முதலமைச்சர் கலைஞர் 30.5.2009 அன்று ஆணையிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, இதுவரை 18 தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் உரிய சான்றாவணங்களை அரசுக்கு அளித்துள்ளனர். அந்தச் சான்றாவணங்களின் அடிப்படையில் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா, பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், முனைவர் ச.அகத்தியலிங்கம், பாவலர் நாரா. நாச்சியப்பன், புலியூர்க்கேசிகன், சின்ன அண்ணாமலை, வடுவூர் துரைசாமி அய்யங்கார், பேராசிரியர் மு.இராகவ அய்யங்கார் ஆகிய 8 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 40 இலட்ச ரூபாயும்; பம்மல் சம்பந்தனார், டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.சு.பூர்ணலிங்கம் பிள்ளை, தொ.மு.பாஸ்கர தொண்டைமான், பாலூர் கண்ணப்ப முதலியார், வை.மு. கோதைநாயகி, என்.வி. கலைமணி, கவிஞர் முருகு சுந்தரம், புலவர் த.கோவேந்தன், அ.க.நவநீதகிருட்டினன் ஆகிய 10 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு தலா 3 இலட்ச ரூபாய் வீதம் 30 இலட்ச ரூபாயும் என 18 தமிழறிஞர்களின் 128 மரபுரிமையர்க்குப் பரிவுத்தொகையாக மொத்தம் 70 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (10.7.2009) வழங்கினார்.

மேலும், உடல் நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்புகளுக்காக அளிக்கப்படும் பரிவுத் தொகை 3 இலட்ச ரூபாய்க்கான காசோலையை அவருக்குத் துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் வழங்குவார்.

இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி, இந்து சமய அறநிலையம் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.கூ.வ.எழிலரசு ஆகியோர் உடனிருந்தனர்.

. . . .

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.